RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd223S110

Asian Research Association

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

# Changes in Medical Field at Present Situation

## காலச் சூழலில் மாற்றம் கண்ட மருத்துவம்

**R.K. Catherin Freeda** [a,*]

[a] Department of Tamil, Scott Christian College (Autonomous), Nagercoil-629003, Tamil Nadu, India.

*Corresponding author Email: catherinsingh@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S110

Received: 13-04-2022; Revised: 23-07-2022; Accepted: 30-07-2022; Published: 19-08-2022

**Abstract:** In ancient Tamil Nadu, countless literatures emerged in the world of Tamil literature due to the patronage of poets who knew the depths of the sea like Tamil Literature. A country's greatest wealth is its literature. Sangam literature is the best wealth we have in that respect. Poets had political knowledge along with literary knowledge. They became ministers and lifelong friends of the patrons who supported them. The patrons, seeing the poets, cheered like a child who has seen its mother. Many of the patrons in Kuruntokai literature have been celebrated by poets through their songs. Their bravery, excellence, military strength, fighting skills, the city they lived in, and historical references are also featured in the songs. This research paper has explained the pride of such patrons who have been established in this way.

**Keywords:** Kuruntokai, Sangam literature, Medical changes, Poets

**Language:** **Tamil**

## முன்னுரை

பழங்காலந்தொட்டே மக்களின் பண்பாட்டோடும், பழக்க வழக்கங்களோடும் பின்னிப்பிணைந்த ஒன்றாக மருத்துவம் காணப்படுகின்றது. ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்பது பழமொழி. ஆனால் இன்றைய சூழலில் நோய்க்கு மருந்து பார்த்தே மக்களிடம் உள்ள செல்வமெல்லாம் கரைந்து போகின்றது என்பது உண்மை. ஆதிகால மக்கள் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்து வந்தனர். அதோடு கையில் கிடைத்த பொருட்களையெல்லாம் பச்சையாகவே உண்டு வந்தனர். ஆனாலும் அவர்கள் எந்த கொடிய நோய்களுக்கும் ஆளானதாக எந்த குறிப்பும் காணப்படவில்லை. ஆனால் அடுத்தடுத்த காலகட்டங்களில் மக்களின் வாழ்வியல் வளர்ச்சிக்கு ஏற்ப நோய்களும் ஒவ்வொன்றாக தோன்றியிருக்கக்கூடும். ஏனெனில் இயற்கையை முற்றிலுமாக நம்பியிருந்த மனிதன் சமூகம் நாகரிக வளர்ச்சியால் செயற்கையையும் தன் பங்காக சேர்க்கத் தொடங்கி முழுவதுமாக தன் வாழ்வை மாற்றிக் கொண்டதால் தினமும் புதிய புதிய கொடிய நோய்களுக்கு ஆட்பட்டு வருகின்றது. இப்படி மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட நோய்களுக்கு பயன்படுத்திய மருத்துவ முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய செய்திகளை இக்கட்டுரை ஆய்கின்றது.

## ஆய்வு அணுகுமுறைகள்

சங்ககாலம் முதல் தற்காலம் வரைக்கும் மக்கள் பயன்படுத்தும் மருத்துவ முறைகளைத் தெரிந்து கொள்வதற்காக சங்ககால இலக்கியங்களான பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய நூல்களும் மருத்துவர்களான மு. துளசிமணியும் ச. ஆதித்தனும் (Tuḷasimaṇi & Adithyan, 2007) எழுதிய ‘மருந்தியல்’ என்ற நூலும் ஏ.ஆர். ஈஸ்வரி எழுதிய ‘இந்திய மருத்துவம்’ என்ற நூலும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன (Eswari, 2009). இந்நூல்களில் காணப்படும் மருத்துவம் சார்ந்த குறிப்புகளை இரண்டு வகையாக வகைப்படுத்தி அணுகப்பட்டுள்ளது. முதலாவது நோய் காரணிகள் குறித்தக் குறிப்புகளும் மருந்து குறித்த விளக்கமும் இரண்டாவதாக சங்ககாலம் முதல் தற்காலம் வரைக்கும்

மக்கள் பயன்படுத்தும் மருத்துவ முறைகள் குறித்த குறிப்புக்கள். நோய்காரணிகளான வாதம், பித்தம், கபம் என்ற மூன்றும் மிகுதியானாலும் குறைந்தாலும் நோய்கள் ஏற்படுவதையும் மருந்து என்ற சொல்லுக்கு நோய்களைக் குணப்படுத்தவும் பயன்படுத்தப்படும் பொருள் என்ற விளக்கத்தையும் ஆகியோர் எழுதிய நூல்களில் காணக்கிடைக்கிறது (Tuḷasimaṇi & Adithyan, 2007). சங்ககால மக்கள் கிருமிநாசினிகள் பயன்படுத்தியதையும் புண்களைக் குணமாக்க செய்த வைத்திய முறைகள் குறித்தக் குறிப்புகள் புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் கூறப்பட்டுள்ளன. அதேபோல் நாட்டு மருத்துவத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து இந்திய மருத்துவம் என்ற நூலில் கூறப்படுகிறது (Eswari, 2009).

## மருந்து பற்றிய விளக்கம்

மனித உடம்பில் வாதம், பித்தம், கபம் என்ற மூன்றும் மிகுந்தாலும், குறைந்தாலும் நோய் ஏற்படுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இவை மூன்றும் மிகுவதையும், குறைவதையும் எப்படி அறிந்து கொள்வதென்றால், நம் உடம்பு சமநிலையில் இருந்தால் நமக்கு எந்தவித இடையூறும் ஏற்படாது. மாறாக உடலில் பல கஷ்டங்களும், சங்கடங்களும் ஏற்படும் போது தான் அது நோய் என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். அப்படிப்பட்டச் சூழலில் நம் உடம்பில் ஏற்படும் கஷ்டங்களைப் போக்கவே மருந்தைப் பயன்படுத்துகின்றோம். “மருந்து என்ற சொல்லுக்கு மனிதனிடத்திலும், பிற உயிரினங்களிடத்திலும் நோய்களைக் கண்டறியவும், நோய்கள் வராமல் தடுக்கவும் மற்றும் நோய்களைக் குணப்படுத்தவும் பயன்படுத்தப்படும் பொருள் என விளக்கம் கொள்ளலாம். ஆங்கிலத்தில் ட்ரக்(Drug) என்று வழங்கப்படும் இந்தச் சொல் ட்ரோக்(Droguu) என்ற பிரெஞ்சு சொல்லிலிருந்து தோன்றியது” (Tuḷasimaṇi & Adithyan, 2007). தற்போது மக்களிடம் என்ன குறைவாக உள்ளதோ இல்லையோ? மருந்துக்கு மட்டும் எந்த குறையும் இல்லை.

## சங்க இலக்கியத்தில் மருத்துவம்

திணை அடிப்படையிலான வாழ்க்கை வாழ்ந்து ஒவ்வொரு திணைக்கேற்ற தொழில் செய்து, தங்கள் சூழலுக்கு ஏற்ப பொருட்களை உற்பத்தி செய்து அவற்றையே தங்கள் வாழ்வியல் தேவைகளுக்குப் பயன்படுத்தி இயற்கையான வாழ்க்கை வாழ்ந்து வந்த சங்ககால மக்கள் எவ்விதமான கொடிய நோய்களுக்கும் ஆட்பட்டதாக எவ்வித குறிப்பும் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆனால் சங்ககால மக்கள் பசியை நோய் என்றே கூறி வந்தனர். அதாவது மக்களின் பசியைத் தீர்க்கும் வள்ளல்களை “பசிப்பிணி மருத்துவன்” என்ற பெயராலேயே வழங்கி வந்தனர்.

சங்ககால மக்கள் வேம்பை சிறந்த கிருமிநாசினியாகப் பயன்படுத்தியுள்ளனர். அதாவது போரில் புண்பட்ட வீரர்களைக் கிருமிகள் தாக்காமலிருக்கக் கூரைகளில் வேப்ப இலைகளைப் போட்டு வைத்த செய்தியை

“தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ” (Parimaṇam & Balasubramanian, 2004)

என்ற பாடல்வரி புலப்படுத்துகின்றது. அதோடு சங்ககால மக்கள் இசையையும் மருந்தாகப் பயன்படுத்தியுள்ளனர். அதாவது போரில் புண்பட்டு வேதனையால் துடிக்கும் வீரர்களின் வேதனையை மாற்ற ஆம்பல், குழல் போன்றவற்றை ஊதியும் காஞ்சிப் பண்ணை இசைத்துப் பாடியும் மகிழ்வித்து வலியை மறக்கச் செய்த செய்தியை புறநானூறு (281) கூறுகின்றது.

இவை தவிர போரில் ஆழமாகப் புண்பட்ட வீரர்களின் புண்களைக் குணமாக்க பஞ்சு வைத்துக் கட்டியும் ஊசி கொண்டு தைத்தும் மருத்துவம் செய்தனர். இதனை

“நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்

அம்புசேர் உடம்பினர்

பஞ்சியும் களையாப்புண்ணார்

சிரல் பெயர்ந்தன்ன நெடு வெள் ஊசி

நெடு வசி பரந்த வடுவாழ் மார்பின்" (Duraisami Pillai, 1950)

என்ற பாடல் வரிகள் சுட்டுகின்றன. இதிலிருந்து சங்க காலத்திலேயும் பல வகையான மருத்துவ முறைகள் கையாளப்பட்டு வந்துள்ளது புலனாகின்றது.

## நாட்டுப்புற மருத்துவம்

சங்ககாலத்துக்கு அடுத்த காலகட்டங்களில் மக்கள் இயற்கையில் கிடைத்த பச்சிலைகளையும், மூலிகைகளையும் தாங்கள் சமையலுக்குப் பயன்படுத்துகின்ற சுக்கு, மிளகு, திப்பிலி, இஞ்சி, பூண்டு, வெந்தயம், ஓமம், கிராம்பு போன்ற பொருட்களைக் கொண்டு பலவகையான மருந்துகளைச் செய்து தங்களுக்கு ஏற்படுகின்ற சிறு சிறு நோய்களைக் குணமாக்கி வந்தனர். இது கை மருத்துவம், எளிய மருத்துவம், வீட்டு வைத்தியம், பாட்டி வைத்தியம், நாட்டுப்புற மருத்துவம் போன்ற பல பெயர்களில் வழங்கப்பட்டு வந்தது. "நாட்டுப்புற மருத்துவம் எப்போது தோன்றியது என்பதை வரையறுத்துக் கூற முடியாது. மனித இனம் என்று தோன்றியதோ அன்றே நோயும் தோன்றி விட்டது எனலாம். நமது நாட்டில் உயிர்கள் தோன்றிய காலமே நாட்டுப்புற மருத்துவம் தோன்றிய காலம் என்றும் கூறலாம். ஆதிமனிதன் வேட்டையாடியும், காய்கனிகளை உண்டும் வாழ்ந்து வந்த காலத்தில் காலில் காயம் பட்டவுடன் வலியைத் தணிவிப்பதற்காகவும் காயத்தை ஆற்றவும் மூலிகைச் சாற்றைப் பயன்படுத்திய காலம் தான் முதல் மருத்துவம் தோன்றிய காலமாகும். இப்படி பகுத்தறிவற்ற பாமரனால் உருவாக்கப்பட்டதே நாட்டுப்புற மருத்துவம் ஆகும்" (Eswari, 2009). இந்த மருத்துவ முறைதான் ஒரு குறிப்பிட்ட காலம் வரை மக்களிடையே பரவலாகக் காணப்பட்டது. அதாவது காய்ச்சல், தலைவலி போன்றவற்றுக்கு பச்சிலை மருந்து அரைத்து பற்றுப் போடுவதும், பூரான், தேள் போன்ற விஷ ஜந்துக்கள் கடித்தால் சுண்ணாம்பு தடவுவதும் வயிற்று உபாதைகளுக்கு பூண்டு, வெந்தயம், ஓமம் போன்றவற்றைப் பொடி செய்தோ, கஷாயம் செய்தோ பயன்படுத்தியும் வந்தனர். இந்த மருத்துவம் எந்தவிதமான பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாமல் உடலுக்கு வலு சேர்ப்பதாகவே இருந்து வந்தது. ஆனால் இம்மருந்துப் பொருட்கள் நோயைக் குணமாக்க சில நாட்கள் மட்டும் எடுத்துக்கொள்ளும். ஆனாலும் ஆரோக்கியமான மருத்துவ முறையாகவே இந்த நாட்டுப்புற மருத்துவம் திகழ்ந்தது. இதுவும் காலப்போக்கில் மறைந்து கிராமப்புறங்களில் ஒருசில மக்களால் மட்டும் தற்போது கையாளப்பட்டு வருகின்றது.

## சித்த மருத்துவம்

எளிய வீட்டு வைத்தியங்களால் குணப்படுத்த முடியாத நோய்களுக்கும் வாதம், எலும்பு முறிவு, காயம் போன்ற நோய்களுக்கும் மக்கள் சித்த வைத்திய சாலைகளை நாடினர். இம்மருத்துவர்களைச் சித்த வைத்தியர் என்ற பெயரால் வழங்கினர். இங்கு தயார் செய்யப்படும் மருந்துகளும் இயற்கை மூலிகைகள், பழங்கள், வேர்கள் போன்றவற்றால் தயாரிக்கப்பட்டவையே. இவ்வைத்தியர்கள் மருந்துப் பொருட்களால் உருவாக்கிய எண்ணெய் வகைகள், லேகியம், பொடிகள்(சூரணம்), குளிகைகள் போன்றவற்றாலும் பலவித வேர்களைப் பயன்படுத்திச் செய்த கசாயங்கள் போன்றவற்றாலும் மருத்துவம் செய்தனர். இம்மருத்துவர்கள் சித்த மருத்துவத்தை முறையாகக் கற்றவர்களாகவும், பரம்பரை வைத்தியர்களாகவும் இருந்தனர். பெரும்பாலான சித்த மருத்துவங்களுக்கு பத்திய முறை கடைபிடிக்கப்பட்டு வந்தது. இம்மருத்துவம் எந்தவிதமான பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாத உடலுக்கு எவ்வித தீங்கையும் ஏற்படுத்தாத மருத்துவமாக திகழ்ந்தது. இம்மருத்துவ முறையும் நோயைக் குணப்படுத்த பல நாட்கள் எடுத்துக்கொள்ளும். அதிகமான பொருட்செலவும் எந்த விதமான பக்கவிளைவையும் ஏற்படுத்தாத இச்சித்த மருத்துவமும் காலப்போக்கில் மறைந்து போனது. ஆனாலும் தற்போது ஆங்காங்கே துளிர்க்கின்றது.

## உடன்போக்கும் சமூகக்கலப்பும்

"நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்

நாட்டினர் தாம் வியப்பெய்தி, நன்றாம் என்பர்!

ஊடகத்தே கிணற்றோரத்தே, ஊரினிலே

காதலென்றால் உறுமுகின்றார்!

பாடை கட்டி அதனைக் கொல்ல,

வழிகள் செய்வார்! பாரினிலே பொறாமையினால்

மூடரெல்லாம் விதிகள் செய்து,

முறை தவறி இடர் செய்து கெடுகின் றாரே!"

என்று பாரதியார் குயில்பாட்டில் கூறுவது முற்றிலும் உண்மையாகும். ஏனெனில் காதல் கொண்ட தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழ முடியாத போது உடன்போக்கை நிகழ்த்துவர். மேலும் சங்ககாலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து நில மக்களுக்குள்ளும் கலப்புத் திருமணம் இருந்ததனை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. இன்று கலப்பு திருமணம் பெரும்பாலும் உடன்போக்குத் திருமணமாகவே காணப்படுகிறது. ஏனெனில் பெற்றோர்களும், உடன் பிறப்புகளும், உறவினர்களும் களவொழுக்கத்திற்கு சம்மதிக்காத வேளையில், வேறுவழியின்றி சாதி மதங்களைக் கடந்து காதல் கொண்ட இருவரும் உடன் போக்கு சென்று அரசு அலுவலகத்தில் பதிவுத் திருமணம் செய்து கொள்கின்றனர். இத்தகு கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு தமிழக அரசு, பல நலத்திட்ட உதவிகளைச் செய்து வருகின்றது. இதனடிப்படையில் நோக்கும் போது பிரிவினைகள் அற்ற சமூக இருத்தியலுக்கு உடன்போக்கு துணைநிற்பதை அறியமுடிகிறது.

## ஆங்கில மருத்துவம்

நாட்டுப்புற மருத்துவமும், சித்த மருத்துவமும் மக்களிடையே பிடித்திருந்த இடத்தைத் தற்போது ஆங்கில மருத்துவம் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. உடம்பில் எந்த ஒரு நோய் ஏற்பட்டாலும் அதை விரைவில் குணப்படுத்தும் ஆற்றலும், சிறுகாயங்கள் தொடங்கி பெரிய பெரிய விஷங்களுக்காக போடப்படுகின்ற தடுப்பூசிகள் போன்றவற்றின் ஆற்றலுக்கும் மயங்கிய மக்கள் தற்போது நோய் என்ற ஒன்று உடம்பில் ஏற்பட்டாலே ஆங்கில மருத்துவத்தை நாடிச் செல்கின்ற நிலை ஏற்பட்டு விட்டதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகின்றோம்.

தற்போது நாம் வாழும் சூழலில் பல வகையான கிருமிகளும், எண்ணற்ற வைரஸ், பாக்டீரியா போன்றவைகளும் பலவகையான நோய்களை ஏற்படுத்தி மக்களை தர்மசங்கடத்தில் ஆழ்த்தி வருவதை நாம் காண்கின்றோம். அதோடு பல வகையான கெமிக்கல்களும் மக்களிடையே பழக்கத்தில் இருப்பதால் அவற்றாலும் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களுக்கு மக்கள் ஆளாகி வருகின்றனர். இப்படிப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட நோய்களுக்கு மக்களின் எளிய மருத்துவ முறைகளும் சித்த மருத்துவங்களும் எவ்விதத்திலும் பயன்தராது. இதுவும் மக்கள் ஆங்கில மருத்துவ முறைகளை நாடிச் செல்வதற்கு ஒரு காரணமாகின்றது.

மேலும் நம்முடைய முன்னோர்கள் தங்களுக்கு எது தேவையென்றாலும் அதை தாங்களே தயார் செய்து உண்டு வந்தனர். ஆனால் தற்போது FAST FOOD என்ற துரித உணவுகள் மக்களிடையே பிரபலமாகியிருப்பதால் அவற்றையே பெரும்பாலும் மக்கள் பயன்படுத்துவதால் அவற்றில் கலந்திருக்கும் கெமிக்கல்களால் மக்களின் செரிமான உறுப்புகளும், உள்ளுறுப்புகளும் பாதிக்கப்பட்டு, இன்ன நோய் என்று கண்டறிய முடியாத கொடிய நோய்களுக்கு மக்கள் ஆளாகி வருகின்றனர். இப்படிப்பட்டச் சூழலிலும் மக்களுக்குத் துணை நிற்பது ஆங்கில மருத்துவம்தான்.

என்னதான் ஆங்கில மருத்துவம் மக்களுக்கு ஏற்படும் சில நோய்களுக்கு உடனடி நிவாரணம் கொடுத்தாலும் அம்மருந்துகளால் பலவிதமான பக்க விளைவுகளை ஏற்படுத்தும் அபாயமும் ஏற்படுகின்றது. மேலும் உறுப்பு மாற்று அறுவை சிகிட்சை, நுண்துளை அறுவை சிகிட்சை, லேசர் கதிர் வீச்சு என மருத்துவத்துறை எவ்வளவுதான் வளர்ச்சியடைந்தாலும் இன்றும் பல நோய்களுக்கு விடை தெரியாமல் மருத்துவத்துறை திணறிக் கொண்டிருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

## முடிவுரை

இயற்கையோடு வாழ்ந்து இயற்கையில் கிடைக்கும் பொருட்களையே உண்டு நீண்ட ஆயுளோடு வாழ்ந்து வந்த மனிதகுலம் தற்போது தெரிந்தே பயன்படுத்துகின்ற கெமிக்கல் சேர்ந்த உணவுகளால் தங்கள் உடல் நலத்தை இழந்து சிறு வயதிலேயே மரணத்தைத் தழுவுகின்றனர். இவ்வாறு காலம் மாறும்போது மாறுகின்ற உணவுப்பழக்கத்தால் புதுப்புது நோய்களும் புதுப்புது மருத்துவங்களும் தோன்றியபடி இருக்கின்றன. இவ்வாறு ஆரோக்கிய உணவோடு கூடிய இயற்கை மருத்துவம் கால மாற்றத்துக்கு ஏற்ப கெமிக்கலாக மாறி மனித குலத்தை அழிவின் பாதைக்குக் கொண்டு செல்கின்றது. ஆனால் இனிமேலும் அடுத்தடுத்த காலகட்டங்களில் இம்மருத்துவமும் மாற்றம் பெறும்.

## References

Duraisami Pillai, Auvai, Su., (1950) Pathitrupathu, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Eswari, A.R., (2009) India Maruthuvam, Arivu Pathippagam, Chennai, India.

Parimaṇam A.M., Balasubramanian, K.V., (2004) Purananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Tuḷasimaṇi, Mu., Adithyan, S., (2007) Marundhiyal, Tamil University, Thanjavur, India

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

R.K. Catherin Freeda, Changes in Medical Field at Present Situation Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 49-53. DOI: https://doi.org/10.54392/ijmrd223S110